**தேசிய விளையாட்டு நிதியம் - 2025**

**-------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 25(4) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையான மற்றும் நியாயமான விதத்தில் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இலங்கை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகை தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் நிதியத்தை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1973 இன் 25 ஆம் இலக்க தேசிய அரச பேரவையின் விளையாட்டுக்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவு | இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை மோட்டார் விளையாட்டுச் சங்கம் ஆகியவற்றால் 2024 ஆம் ஆண்டில் ஒழுங்கு செய்யப்பட்ட Fox Hill Super Cross 2024 போட்டியில் ஏற்பட்ட விபத்தினால் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்காக, மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 250,000 உள்ளடங்கலாக ரூபா 12,000,000 நட்டஈடாக வழங்கப்பட்டிருந்தது. மேலும், தேசிய விளையாட்டுச் சபையின் உறுப்பினர்கள் சபை அமர்வுகளில் கலந்து கொண்டதற்காக ரூபா 715,000 படிகள் நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது. | இலங்கையில் ஏதேனும் ஒரு விளையாட்டை ஊக்குவிப்பது, அதனை அபிவிருத்தி செய்வது மற்றும் மேம்படுத்துவது ஆகிய நோக்கங்களுக்காக, கௌரவ அமைச்சரின் அனுமதியுடன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன | நிதியத்தின் செலவினங்கள் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது, உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 26,724,796 பற்றாக்குறையொன்றாகக் காணப்பட்ட அதேவேளை, இதற்கு எதிராக முன்னைய ஆண்டில் ரூபா. 102,471,210 மிகையாக இருந்தது. அதன் பிரகாரம் நிதிப் விளைவுகளில் ரூபா 129,196,006 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் கிடைக்கப் வேண்டிய ரூபா 164,698,562 ஆன தேசிய லொத்தர் சபையின் பங்களிப்பானது முன்னைய ஆண்டைப் போன்று கிடைக்காமையே இவ்வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் முக்கிய வருமான மற்றும் செலவினப் விடயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு அவற்றின் அதிகரிப்பு அல்லது குறைவின் பெறமானங்கள் அதற்கான சதவீதங்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான / செலவின உருப்படி | மீளாய்வாண் டிற்கான பெறுமதி | முன்னைய ஆண்டிற்கான பெறுமதி | அதிகரிப்பு / குறைவு | அதிகரிப்பு % / ஆக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| **வருமானம்** | | | | |
| அரச மானியம் | - | 206,272,528 | (206,272,528) | 100 |
| முதலீடு | 2,696,721 | 2,115,993 | 580,728 | 28 |
| ஏனைய வருமானம் | 9,745,400 | 82,483,914 | (72,738,514) | 88 |
| செலவினம் | | | | |
| விளையாட்டு போட்டி | 35,922,682 | 65,193,481 | 29,270,799 | 45 |
| நலனபுரி மற்றம் பயிற்றுவிப்பாளர் படிகள் | - | 2,835,631 | 2,835,631 | 100 |
| அபிவிருத்தி செயத்திட்டம் | 634,996 | 116,495,138 | 115,860,142 | 99 |
| ஏனைய செயற்பாட்டு செலவினம் | 2,609,240 | 3,876,975 | 1,267,735 | 33 |

(அ) இலங்கையில் விளையாட்டுகளை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்நிதியம் நிறுவப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நிதியத்தின் மொத்த வருமானம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான செலவினம் முறையே 96 சதவீதத்தினாலும் மற்றும் 99 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது. இதன் மூலம், நிதியத்தை நிறுவுவதன் முதன்மை நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதியத்தின் நிதி வளங்களைப் பயன்படுத்துகின்ற மட்டம் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டில் நலன்புரி மற்றும் பயிற்றுவிப்பாளர் கொடுப்பனவுகளாக ரூபா 2,835,631 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அதற்காக எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய, மீளாய்வண்டில் வீரர்களின் நலன்புரி மற்றும் இயலளவினை மேம்படுத்துவதற்கும், பயிற்றுவிப்பாளர்களை ஊக்குவிப்பதற்கும் நிதியத்தின் நிதிப் பங்களிப்பு வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய விளையாட்டு நிதியத்தின் மூலம் விளையாட்டு உபகரண உதவிகளை வழங்குவதற்காக முழுத் தீவையும் உள்ளடக்கும் வகையில் தேவைகளைக் கண்டறிந்து, முன்னுரிமை அடிப்படையில் விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கிடைக்கப்பெறும் கோரிக்கைகளுக்கு அமைவாக, காணப்படும் நிதி ஏற்பாடுகளின் அடிப்படையில் கௌரவ அமைச்சரின் அனுமதியுடன் குறித்த கோரிக்கைகளுக்கான நிதி ஏற்பாடுடுகள் வழங்கப்படுகின்றன. | முழுத் தீவினதும் விளையாட்டுத் துறையின் தேவைகளை முறையாக இனங்கண்டு முன்னுரிமை அடிப்படையில் விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்காக முறைசார்ந்த வேலைத்திட்டம் ஒன்றினைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிதியத்தினால் வலைப்பந்தாட்ட சாம்பியன்ஷிப் போட்டிக்காக வழங்கப்பட்ட ரூபா 1,000,000 நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 652,400 செலவிடப்பட்டிருந்த போதிலும், செலவினங்களை உறுதிப்படுத்துவதற்காகப் போட்டியில் பங்கேற்ற வீராங்கனைகள் மற்றும் உத்தியோகத்தர்கள் பற்றிய விவரங்கள் மற்றும் சீருடைப் கொள்வனவு தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதி ஏற்பாட்டில் மீதமான ரூபா 347,600 தொகையை மீண்டும் நிதியத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா ஒரு மில்லியன் தொகையானது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2025.06.02 ஆம் திகதியன்று வழங்கப்பட்டுள்ளதுடன், இதுவரை அது தொடர்பான விரிவான செலவின அறிக்கையோ அல்லது உறுதிப்படுத்தப்பட்ட பட்டியல்களின் பிரதிகளோ அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. | வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகள் தொடர்பான விரிவான செலவின அறிக்கைகள் மற்றும் உரிய சான்றுகளைப் பெற்றுக்கொண்டு, மீதிப் பணத்தை விரைவாக நிதியத்திற்குத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி செயல்பாடுகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டவாறு, தேசிய லொத்தர் சபையின் லொத்தல் பங்களிப்புப் பணத்திலிருந்து மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்ட குறிப்பிட்ட செயற்பாடுகள் மற்றும் அதற்கான செலவினங்களை அத்திணைக்களத்திற்கு அறிவித்து தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நிதியத்தினால் போதுமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | லொத்தர் வருமானமானது தேசிய விளையாட்டு நிதியத்திற்காக ஒதுக்கீடு செய்து தனியாக பராமரிக்கப்பட்டு செல்லப்படாமல் இருப்பதுடன், ஒட்டுமொத்த அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்திற்குள் தேவையான சந்தர்ப்பங்களில் செலவினங்களை மேற்கொள்வதற்காக நிதி விடுவிப்பு செய்யப்படுகின்றது. | லொத்தர் பங்களிப்புப் பணத்தை செயற்திறனாக பயன்படுத்துவதற்காக, நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் குறிப்பிட்ட செயற்பாடுகள் மற்றும் அதற்கான செலவினங்களை திறைசேரிக்கு அறிவித்து தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 877(2)(ஈ) பிரகாரம், கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதியத்தின் உறுதிப்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகளுடன் கூடிய செயலாற்றல் அறிக்கையை அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்ற போதிலும், நிதியத்தினால் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கான உரிய செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தயாராக உள்ளதுடன் 2025 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | செயலாற்றல் அறிக்கைகளை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தயாரித்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய அரச பேரவையின் விளையாட்டுச் சட்டத்தின் 25(2) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு ஆண்டும் நிறைவடைந்த பின்னர் முடிந்தவரை விரைவில் நிதியத்தின் நிர்வாகம் தொடர்பான அறிக்கையொன்று அமைச்சின் செயலாளரால் தயாரிக்கப்பட வேண்டும் என்றபோதிலும், இவ்வறிக்கையின் திகதி வரை மீளாய்வண்டிற்குரிய நிர்வாக அறிக்கையும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கான நிர்வாக அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டின் முதலாவது காலாண்டில் அறிக்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விளையாட்டுச் சட்டத்தின் 25(2) ஆம் பிரிவின் பிரகாரம் நிர்வாக அறிக்கையை குறிப்பிட்ட காலவரையறைக்குள் தயாரித்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |